# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 01/மா/2025
நாள் 07.10.2025

திரு. N. சையது இப்ராகிம் — முறையீட்டு மனுதாரர்
புதுக்கோட்டை

ஆணையர் — எதிர்மனுதாரர்
புதுக்கோட்டை மாநகராட்சி

புதுக்கோட்டை, ஆலங்குடி ரோடு, தெற்கு 4 ஆம் வீதி, அண்ணா சிலை அருகில், TS No.4205. என்ற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் திரு.N.சையது இப்ராகிம் என்பவரின் 18.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2024 அன்று பெறப்பட்டு 01/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

புதுக்கோட்டை, ஆலங்குடி ரோடு, தெற்கு 4 ஆம் வீதி, அண்ணா சிலை அருகில், TS No.4205. என்ற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் திரு. N. சையது இப்ராகிம் என்பவர் 18.12.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"புதுக்கோட்டை நகரம் மிகப் பழமையான சமஸ்தான நகரமாகும். ஆனால், பொதுமக்கள் பொழுது போக்க ஏதுவாக சரியான பூங்காவோ, மைதானமோ, குழந்தைகள் விளையாடும் பூங்காவோ பெயர் சொல்லும் அளவில் ஏதும் அமையப் பெறவில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2 (j) கள ஆய்வு செய்ய 7/8/2024 அன்று நகராட்சி ஆணையர் சியாமளா அனுமதி அளித்துள்ளார்.

புதுக்கோட்டை நகராட்சி ஆணையாளரின் 11.9.2024 நாளிட்ட கடிதம் மற்றும் 15.9.2024 தேதிய இந்து தமிழ் இசை நாளிதழில் வரப்பட்ட புதுக்கோட்டை கலைஞர் பூங்கா குறித்து பத்திரிக்கை செய்தி தொடர்பு மறுப்பு அறிக்கை ஆகியவற்றில் பொதுமக்கள் நீண்ட நாள் கனவினை நிறைவேற்றும் வகையில் கலைஞர் கலைக் கல்லூரி எதிர்ப்புறம் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தை கைப்பற்றி சீர் செய்து பூங்கா மாற்றம் ஏற்படுத்தப்பட்டு, அதற்கு கலைஞர் பூங்கா என்று பெயரிடப்பட்டு 24/2/2024 அன்று திறக்கப்பட்டது. பூங்காவிற்கு ஆரம்பத்தில் பொதுமக்களிடம் நுழைவு கட்டண வசூலிக்கப்படாமல் இருந்தது. பின்பு நுழைவு கட்டணம் நபருக்கு 20 ரூபாய் என்று வசூல் செய்யப்பட்டது. தகவல் உரிமைச் சட்டம் 2 (j) கள ஆய்வு செய்ததில் தற்போது நுழைவு கட்டணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை என்று உதவி பொறியாளர் கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். எங்களின் வலியுறுத்தலுக்குப் பிறகு உதவி பொறியாளர் அளித்த தகவல் கடிதத்தின் அடிப்படையில்

இரண்டு நாள் மட்டும் நுழைவு கட்டண வசூல் செய்யாமல் இருந்து விட்டு மாநகராட்சி ஆணையர் திரு. D. நாராயணன் அவர்கள் மாநகராட்சி உதவி பொறியாளர் கொடுத்த தகவல் தவறானது என்றும் மாநகராட்சி ஆணையரை ஒப்புதல் பெறாமல் வெளியிட்டுள்ளார் என்றும் மறுப்பு தெரிவித்து கடிதம் அளித்தது இந்துதிசை தமிழ் நாளிதழில் வெளிவந்துள்ளது. அதில் தவறுதலாக தகவல் வழங்கிய உதவி பொறியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மீண்டும் தனியார் மூலம் ஒப்பந்த விடப்பட்டதாக கூறி பொதுமக்களிடம் நுழைவு கட்டணம் ரூ.20 வசூலித்து வருகிறார்கள். இதனால் புதுக்கோட்டை நகரில் வாழும் பொதுமக்கள் மத்தியில் பெரும் குழப்பமும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆக மேற்சொன்ன இரண்டு பத்திகளிலும் குறிப்பிட்டுள்ளபடி மாநகராட்சி உதவி பொறியாளரும், மாநகராட்சி ஆணையரும் ஒரு கேள்விக்கு இரண்டு விதமான வெவ்வேறு பதில்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது பலவிதமான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

முதலில் ரூ.20 நுழைவுக் கட்டணம் வசூலிக்க அனுமதி வழங்கப்பட்டதாகவும், பிறகு மறுபடி கைவிடப்பட்டதாகவும், அதன்பின்னர் இலவசமாக அனுமதிக்கப்பட்டதாகவும், மறுபடி நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டதாகவும் வெவ்வேறு தகவல்களை தந்துள்ள மாநகராட்சியிடம் மேற்படி நுழைவுக் கட்டணம் தொடர்பாக மாநகராட்சியில் போடப்பட்ட தீர்மான நகல் விவரம் ஒப்பந்தம் போட்டவர் பெயர் விவரம் யார் யாருக்கு ஒப்பந்தம் விடப்பட்ட விவரம் வசூலிக்கப்பட்ட தொகை விவரத்தினை தகவல் உரிமைச் சட்டம் 2 (j) கள ஆய்வின் மூலம் கேட்டதற்கு நாளது தேதி வரை சரியான தகவல்கள் ஏதும் தர மாநகராட்சியால் மறுக்கப்படுகிறது.

இதன் பின்னணியில் மாநகராட்சி மேலாளர் காளியம்மாள் இருப்பதாகவும், அதற்கு உடந்தையாக மாநகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள் இருப்பதாகவும் தகவல் தெரிய வருகிறது.

இந்த செயல்களுக்கு பின்னர் திரை மறைவில் பெரிய ஊழல் நடைபெற்று இருப்பது தெரிய வருகிறது. பெரிய தொகை லஞ்சமாக கை மாறி இருக்கலாம் என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். புதுக்கோட்டை நகர பொதுமக்கள் தங்கள் உயிருக்கும் உடமைக்கும் பயந்து கொண்டு இந்த பிரச்சனையை வெளியில் கொண்டு வர தயங்குவதால் நேர்மை மிகு தமிழ்நாடு அரசு உள்ளாட்சி முறை மன்ற நடுவர் அவர்கள் புகார் குறித்து விரிவான விசாரணை செய்து ஊழல் முறைகேட்டில் ஈடுபட்ட மாநகராட்சி ஆணையர் அவர்களை விசாரணை செய்து D.நாராயணன் அவர்களையும் மற்றும் மேலாளர் காளியம்மாள் மற்றும் அதில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு புதுக்கோட்டை மக்களுக்கும் உண்மை நிலவரத்தினை வெளிப்படுத்துவதின் மூலம் வருங்காலத்தில் புதுக்கோட்டை மாநகராட்சி நிர்வாகத்திலும் அலுவலர்கள் மத்தியிலும் ஊழல் செய்தால் தண்டிக்கப்படுவோம் என்ற ஒரு எச்சரிக்கை உணர்வு ஏற்படும் என்றும், பொதுமக்களிடையே அரசு அலுவலர்கள் ஊழல் முறைகேடு குறித்து தமிழ்நாடு அரசு உள்ளாட்சித் துறை மன்ற நடுவர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையும், திருப்தியும், சமாதானமும் உண்டாகும் என்பதால் தயவு கூர்ந்து நல்லதொரு நடவடிக்கையினை எடுத்து உதவி புரிந்திட வேண்டுகிறோம்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 03.01.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளர் தனது 12.08.2025 நாளிட்ட கடிதம் எண் 8108/2017/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

“புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.இ3/40101/2006, நாள் 30.05.2019–ன்படி புதுக்கோட்டை நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகாமையிலும், அரசு பெண்கள் மகளிர் கலை கல்லூரி எதிர்புறம் உள்ள பிளாக் எண் 170, நகரளவு எண் 7–ல், 4.96 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய பூங்கா அமைக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், இந்நகர்மன்ற தீர்மான எண்.131, நாள் 02.07.2019–ன்படி பூங்கா அமைக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பூங்கா அமைக்கும் பணிக்கு IUDM 2019-2020-ஆம் திட்டத்தில் ரூ.900.25 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.11, நாள் 23.01.2020–ல் IUDM திட்ட பங்களிப்பு தொகை ரூ.810.225 இலட்சம் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.90.025 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது.

மேற்படி பணிக்கு 20.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் (1) திரு.பி.கருப்பையா (2) திரு. பி. சின்னப்பன் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். அதில் குறைவாக கொடுத்துள்ள திரு. பி. கருப்பையா, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்ற தீர்மான எண்.855, நாள் 31.03.2020 அன்று மன்ற ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 11.05.2020 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டது என பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இந்நகர் மன்ற தீர்மான எண்.447, நாள் 12.01.2024ல் பூங்கா பராமரிப்பிற்கும், மாத வாடகை நிர்ணயம் செய்தும், பூங்கா பராமரிப்பு மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து பராமரித்து செய்திடவும், பூங்கா நுழைவு கட்டணம் ரூ.20/– வசூல் செய்திடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பூங்காவினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.02.2024 அன்று கானொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டு பொது மக்கள் பய்னபாட்டிற்கு கொண்டு வரப்பட்டடது.

மேலும் இந்நகராட்சியில் IUDM 2019-2020-ஆம் ஆண்டு திட்ட நிதியின் கீழ் ரூ.900.25 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கும் பணி முடிவுற்று, 28.02.2024–ம் தேதி முதல் மேற்படி பூங்கா பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்படி பூங்கா பல லட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்டவாறு பல்வேறு அம்சங்களுடன் மாணவ மாணவியர்கள் தங்களது அறிவுத்திறனை வளர்த்து கொள்ளும் வகையில் அறிவியல் தொழில் நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் சார்ந்த உபகரணங்கள் மற்றும் சிறுவர் சிறுமியர்கள் விளையாட்டு திறனை அதிகரிக்கவும், பொதுமக்களுக்கு பொழுது போக்கு அம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. கருவிகள் செயல்பாடுகள் மூலம் கல்வி கற்பதற்கு தேவையான பொருட்கள் நிறுவப்பட்டுள்ளது.

இப்பூங்காவில் பள்ளி குழந்தைகளின் அறிவுத்திறனை மேம்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டது. இப்பூங்கா காலை 8.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பார்வை நேரமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவில் அறிவியல் சார்ந்த உபகரணங்கள், மினி தியேட்டர், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள், கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு ஒப்பந்தத்தில் இனவாரியாக குறிப்பிட்டுள்ள உபகரணங்கள் அனைத்திற்கும் மூன்று வருடத்திற்கு ஒப்பந்ததாரே பழுது மற்றும் பராமரிப்பு செய்து கொடுக்க வேண்டும்.

இப்பூங்காவில் உட்புற தெரு விளக்குகள், உயர் மின் கோபுர விளக்குகள், திரையங்கம், மியூசிக்கல் பவுண்டெயின், அறிவியல் சாதனங்கள், பூங்கா கட்டமைப்பு, பச்சை புல்வெளிகள், திறந்த வெளி திரையரங்கம், மின்சார கார் ஓட்டும் கூடம், கழிப்பிடம் மற்றும் சிறுவர்கள் விளையாடும் இடம், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கான உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பணி மேற்கொள்ள பூங்கா பணி செய்த ஒப்பந்ததாரரிடம் ஒப்படைப்பு செய்வதால், பழுதினை உடனடியாக சரி செய்யவும் அல்லது மாற்றி கொடுக்கவும் வழி வகை உள்ளதினை பொருட்டு நகர்மன்ற தீர்மானத்தின்படி கீழ்க்கண்டவாறு அனுமதி சீட்டு, நுழைவு சீட்டு, மினி தியேட்டர் பராமரிப்பு செய்ய நுழைவு கட்டணம் மற்றும் இதர கட்டணம் ஆகியவை நகர்மன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | நுழைவு கட்டணம் | சிறியவர்கள் | இல்லை |
| | | பெரியவர்கள் | ரூ.20.00 |
| 2 | கண்ணாடி மாளிகை | சிறியவர்கள் | ரூ.50.00 |
| | | பெரியவர்கள் | ரூ.50.00 |
| 3 | மினி தியேட்டர் 7D | சிறியவர்கள் | ரூ.50.00 |
| | | பெரியவர்கள் | ரூ.70.00 |
| 4 | டேஷிங்கார் | சிறியவர்கள் | ரூ.50.00 |
| | | பெரியவர்கள் | ரூ.50.00 |
| 5 | V.R.Games | | ரூ.50.00 |
| 6 | Basket Ball | | ரூ.25.00 |
| 7 | Bike Rider | | ரூ.25.00 |
| 8 | Racing Car | | ரூ.25.00 |
| 9 | சிறியவர்கள் விளையாட்டு | | ரூ.10.00 |
| | Duck | | ரூ.25.00 |
| | Train | | ரூ.25.00 |
| 10 | Trumping – Big, Small | | ரூ.75.00 |
| 11 | Baby Water Peddling | சிறியவர்கள் மட்டும் | ரூ.25.00 |
| 12 | இரு சக்கர வாகனங்கள் | | ரூ.6.00 |
| 13 | நான்கு சக்கர வாகனங்கள் | | ரூ.10.00 |

எனவே புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பூங்கா பராமரிப்பினை மூன்று வருடத்திற்கு M/S.K Infra. ஒப்பந்ததாரருக்கு பராமரிப்பு பணி செய்திடவும், பராமரிப்பு காலம் முடிவுற்ற பிறகு மீண்டும் நகராட்சி வசம் நல்ல நிலையில் ஒப்படைப்பு செய்வதற்கு மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் தொகையினை வசூல் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை செலுத்திடவும், கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்படுத்தி நகராட்சி ஆணையர் திருமதி S.N. சியாமளா அவர்களின் செயல்முறை ந.க. எண் 8108/2017/இ1, நாள் 15.03.2024ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

<u>நிபந்தனைகள்</u>

1. இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் ரூ.100/– மதிப்புள்ள பத்திரத்தில் நகராட்சியுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.
2. பூங்கா செயல்படும் நேரம் காலை 8.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பொதுமக்கள் பார்வை நேரமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. நகராட்சி பூங்கா பராமரிப்பிற்கு வைப்புத் தொகையாக ரூ.1.00 இலட்சம் நகராட்சியில் செலுத்த வேண்டும்.

4. நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட பராமரிப்பு கட்டணம் வசூல் செய்வதற்கு அச்சடிக்கப்பட்ட ரசீதுகள் தொடர் எண் கொடுத்து நகராட்சி ஆணையர் ஒப்புதல் பெற்ற பின்பு பராமரிப்பு கட்டண ரசீதுகள் பயன்படுத்தப்பட வேண்டும். நிர்ணயம் செய்த பராமரிப்பு கட்டணத்திற்கு கூடுதலாக பொதுமக்களிடம் ஏதேனும் கட்டணம் வசூல் செய்யக்கூடாது.

5. பூங்காவில் செடி கொடிக்கு நீர் பாய்ச்சி பராமரிக்கவும், ஆழ்துளை கிணற்றில் மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி மின் மோட்டார்கள் பழுது செலவினம், மின் கட்டணம் தாங்களே செலுத்த வேண்டும்.

6. பூங்காவிற்கு வரும் இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்து, போக்குவரத்திற்கு இடையூறு இல்லாதவாறு வைத்துக் கொள்ள வேண்டும்.

7. பூங்காவில் பயன்படுத்தப்படும் அனைத்து மின் இணைப்புகளுக்கும் உரிய மின் கட்டணத்தை ஒப்பந்தாரரே முழு பொறுப்பில் செலுத்திக் கொள்ள வேண்டும்.

8. மேற்படி பூங்காவில் வருங்காலங்களில் ATM அல்லது இதர கட்டுமான கட்டிடங்கள் கட்ட நேரிடும் பட்சத்தில் ஒப்பந்ததாரர் நகராட்சிக்குத் தேவையான இடத்தை ஒதுக்கித் தரவேண்டும்.

9. ஒப்பந்ததாரர் வசூலிக்கப்படும் பராமரிப்பு கட்டணத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வரவு செலவு அறிக்கையினை நகராட்சியில் சமர்ப்பித்து பராமரிப்பு கட்டணத்தில் வரக்கூடிய வசூல் தொகையில் 30 சதவீதம் நகராட்சிக்கு ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட வேண்டும். இத்தொகை தனியாக கணக்கிடப்பட்டு இந்த பூங்கா மேம்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். தொடர் எண் குறிப்பிடாமல், எந்த ஒரு பராமரிப்பு கட்டண ரசீதுகளும் பொதுமக்களுக்கு வழங்க கூடாது. மேலும் வசூலிக்கப்படும் அனைத்து பராமரிப்பு கட்டணத்திற்கான பதிவேடுகள் தனித்தனியாக பராமரிக்கப்பட வேண்டும்.

10. பணியின் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தப்பட்ட உபகரணங்களின் இனவாரியாக ஒரு வருடத்திற்கு ஒப்பந்ததாரரே பராமரித்து கொடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. ஓராண்டு காலத்திற்குள் ஏதேனும் உபகரணங்களின் பழுது ஏற்பட்டால் ஒப்பந்ததாரர் புதியதாக மாற்றியும் சரி செய்து கொடுக்க வேண்டும்.

12. அட்டவணையில் உள்ள நகராட்சி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணங்களை தவிர்த்து வேறு எந்தவிதமான தொகையும் பொதுமக்களிடம் வசூல் செய்யக்கூடாது.

13. பராமரிப்பு காலங்களில் சரியான முறையில் பராமரிக்கவில்லை எனில் ஏதேனும் புகார் வரப் பெற்றால் பராமரிப்பு ஒப்பந்தத்தை ரத்து செய்யப்படும்.

14. மேற்கண்ட பூங்காவில் கேன்டீன் நடத்துவதற்கு 240 சதுர அடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஒப்பந்ததாரர் பராமரிப்பு கட்டணமாக பொது பணித் துறை விலை விகிதப்படி நிர்ணயம் செய்யப்பட்ட தொகை மாதம் ரூ.5000/– மாதந்தோறும் நகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

15. இப்பூங்காவிற்கு 24 மணி நேரமும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு அமர்த்திடவும் அதிக கூட்டம் வரும் இடங்களில் கூடுதல் பணியாளர்களை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

16. அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக் கூடாது.

17. இப்பூங்கா வளாகம் போதுமான பணியாளர்களைக் கொண்டு சுத்தமாக பராமரித்திடவும், இதில் உள்ள கழிப்பறைகளை சுகாதாரமான முறையில் பராமரித்திட வேண்டும்.

18. பாதுகாப்பான குடிநீர் வசதிகள் செய்யப்பட வேண்டும்.
19. பூங்காவில் உருவாகும் திடக் கழிவுகளை தரம் பிரித்து நகராட்சி பணியாளர்களிடம் கொடுக்க வேண்டும்.
20. மேற்படி பூங்கா அமையப்பட்டுள்ள இடம் வருவாய் துறையிலிருந்து நகராட்சிக்கு பொதுமக்கள் உபயோகத்திற்காக பொழுது போக்கும் இடமாக பூங்கா அமைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளதால், வணிக நோக்கத்தில் ஒப்பந்ததாரர் எந்தவிதமான கட்டணமும் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்யக்கூடாது எனவும், நிபந்தனைகளை மீறி பராமரிப்பு மற்றும் பராமரிப்புக் கட்டணம் தவிர வேறு ஏதேனும் கட்டணங்கள் வசூல் செய்வதாக பொதுமக்களிடமிருந்து புகார் வந்தால், நகராட்சி மூலம் மேற்காணும் உத்தரவு ரத்து செய்யப்படும் எனவும், ஒப்பந்ததாரருக்கு நகராட்சி ஆணையாளர் திருமதி S.N. சியாமளா அவர்களின் செயல்முறை உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் நலன் மக்கள் விழிப்புணர்ச்சி மற்றும் ஊழல் தடுப்பு இயக்கத்திற்கு 07.08.2024 அன்று கள ஆய்வு செய்ய திருமதி S.N. சியாமளா நகராட்சி ஆணையாளர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நுகர்வோர் நலன் மக்கள் விழிப்புணர்ச்சி மற்றும் ஊழல் தடுப்பு இயக்கம், கோப்புகளை கள ஆய்வு நேரடியாக பார்வையிட்டனர். அப்போது இம்மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் விடுப்பில் இருந்த காரணத்தினால் புதுக்கோட்டை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள அரசு மகளிர் கலைக் கல்லூரி எதிர்புறம் உள்ள கலைஞர் பூங்காவிற்கு வரும் பொதுமக்களிடம் தற்போது நுழைவு கட்டணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை என்ற விவரத்தினை 11.09.2024 அன்று உதவி பொறியாளர் அவர்களால் பதிலாக அளித்துள்ளார்.

புதுக்கோட்டை மாநகராட்சி கலைஞர் பூங்காவில் நுழைவு கட்டணம் வசூல் செய்வது குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நுகர்வோர் நலன் மக்கள் விழிப்புணர்ச்சி மற்றும் ஊழல் தடுப்பு இயக்கம், தமிழ்நாடு என்ற இயக்கத்தால் விபரம் கோரப்பட்டது. அதற்கு மாநகராட்சி பொறியியல் பிரிவில் பதில் வழங்குவதற்கு பொது தகவல் அலுவலர் மற்றும் மாநகராட்சி பொறியாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்காணும் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவிற்கு உதவி பொறியாளர் பொது தகவல் அலுவலர் அனுமதியின்றி தவறான தகவல் தன்னிச்சியாக அலுவலக நடைமுறையை பின்பற்றாமல் வழங்கியுள்ளார்.

எனவே பொது தகவல் அலுவலர் அல்லாத பிற அலுவலர் கலைஞர் பூங்காவில் நுழைவு கட்டணம் வசூல் செய்யப்படவில்லை என தவறான தகவல் வழங்கி மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்பட காரணமாக இருந்து அலுவலர் மீது 16.09.2024 அன்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரத்தினை 16.09.2024 தேதிய இந்து தமிழ் திசை நாளிதழில் மறு அறிக்கை இம்மாநகராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி திரு. மு. கருணாகரன், K-Infra புதுக்கோட்டை ஒப்பந்ததாரரால் கலைஞர் பூங்கா பராமரிப்பு கட்டணமாக இவ்வாண்டிற்கு ரூ.8,40,000/- நாள் 29.03.2025ல் HDFC வங்கி, புதுக்கோட்டை கிளையில் வங்கி வரைவோலை எண் 015794 ஆக செலுத்தியுள்ளார். மேலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை சரிபார்த்து இவ்வழக்கினை முடித்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 14.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 30.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 14.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“புதுக்கோட்டை நகரம் மிகப் பழமையான சமஸ்தான நகராமாகும். ஆனால், பொதுமக்கள் பொழுது போக்க ஏதுவாக சரியான பூங்காவோ, மைதானமோ, குழந்தைகள் விளையாடும் பூங்காவோ பெயர் சொல்லும் அளவில் ஏதும் அமையப் பெறவில்லை.

பொதுமக்கள் நீண்ட நாள் கனவினை நிறைவேற்றும் வகையில் கலைஞர் கலைக் கல்லூரி எதிர்ப்புறம் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தை கைப்பற்றி சீர் செய்து பூங்கா மாற்றம் ஏற்படுத்தப்பட்டு, அதற்கு கலைஞர் பூங்கா என்று பெயரிடப்பட்டு 24/2/2024 அன்று திறக்கப்பட்டது. பூங்காவிற்கு ஆரம்பத்தில் பொதுமக்களிடம் நுழைவு கட்டண வசூலிக்கப்படாமல் இருந்தது. பின்பு நுழைவு கட்டணம் நபருக்கு 20 ரூபாய் என்று வசூல் செய்யப்பட்டது. தகவல் உரிமைச் சட்டம் 2 (j) கள ஆய்வு செய்ததில் தற்போது நுழைவு கட்டணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை என்று உதவிப் பொறியாளர் கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். எங்களின் வலியுறுத்தலுக்குப் பிறகு உதவிப் பொறியாளர் அளித்த தகவல் கடிதத்தின் அடிப்படையில் இரண்டு நாள் மட்டும் நுழைவு கட்டண வசூல் செய்யாமல் இருந்து விட்டு மாநகராட்சி ஆணையர் அவர்கள் மாநகராட்சி உதவிப்பொறியாளர் கொடுத்த தகவல் தவறானது என்றும் மாநகராட்சி ஆணையரை ஒப்புதல் பெறாமல் வெளியிட்டுள்ளார் என்றும் மறுப்பு தெரிவித்தும் அதில் தவறுதலாக தகவல் வழங்கிய உதவி பொறியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால், மீண்டும் பொதுமக்களிடம் நுழைவு கட்டணம் ரூ.50 வசூலித்து வருகிறார்கள். இந்த கட்டணம் நிர்ணயம் செய்ததற்கு எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் கோரமலும், மாநகராட்சி அனுமதியில்லாமலும், வசூலிக்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி நகல் கோரப்பட்டும் எங்களுக்கு அளிக்கப்படவில்லை.

கட்டணம் நிர்ணயம் செய்ததற்கு எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் கோரமலும் மாநகராட்சி அனுமதியில்லாமலும், தொகை வசூலிக்கப்பட்டதற்கு சம்மந்தப்பட்ட அனைத்து நபர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மற்றும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறும் இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

6. புதுக்கோட்டை மாநகராட்சி உதவிப் பொறியாளர் 14.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.இ3/40101/2006, நாள் 30.05.2019–ன்படி புதுக்கோட்டை நகராட்சி புதிய பேருந்து நிலையம் 4.96 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய பூங்கா அமைக்க தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மன்ற தீர்மான எண்.131, நாள் 02.07.2019–ன்படியும் பூங்கா அமைக்க அனுமதியளிக்கப்பட்டு பூங்கா அமைக்கும் பணிக்கு IUDM 2019-2020-ஆம் திட்டத்தில் ரூ.900.25 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.11, நாள் 23.01.2020–ல் IUDM திட்ட பங்களிப்பு தொகை ரூ.810.225 இலட்சம் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.90.025 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது.

மேற்படி பணிக்கு 20.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேற்படி திரு.பி.கருப்பையா ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகர் மன்ற தீர்மான எண்.855, நாள் 31.03.2020 அன்று மன்ற ஒப்புதல் வழங்கப்பட்டு 11.05.2020 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டது .

இந்நகர் மன்ற தீர்மான எண்.447, நாள் 12.01.2024ல் பூங்கா பராமரிப்பிற்கும், மாத வாடகை நிர்ணயம் செய்தும், பூங்கா பராமரிப்பு மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து பராமரித்து செய்திடவும், பூங்கா நுழைவு கட்டணம் ரூ.20/– வசூல் செய்திடவும்

தீர்மானிக்கப்பட்டு பூங்கா 28.02.2024 அன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இப்பூங்காவில் அறிவியல் சார்ந்த உபகரணங்கள், மினி தியேட்டர், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள், கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு ஒப்பந்தத்தில் இனவாரியாக குறிப்பிட்டுள்ள உபகரணங்கள் அனைத்திற்கும் மூன்று வருடத்திற்கு ஒப்பந்ததாரே பழுது மற்றும் பராமரிப்பு செய்து கொடுக்க வேண்டும்.

இப்பூங்காவில் உட்புற தெரு விளக்குகள், உயர் மின் கோபுர விளக்குகள், திரையங்கம், மியூசிக்கல் பவுண்டெயின், அறிவியல் சாதனங்கள், பூங்கா கட்டமைப்பு பச்சை புல்வெளிகள், திறந்த வெளி திரையரங்கம், மின்சார கார் ஓட்டும் கூடம், கழிப்பிடம் மற்றும் சிறுவர்கள் விளையாடும் இடம், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கான உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பணி மேற்கொள்ள பூங்கா பணி செய்த ஒப்பந்ததாரரிடம் ஒப்படைப்பு செய்வதால், பழுதினை உடனடியாக சரி செய்யவும் அல்லது மாற்றி கொடுக்கவும் வழி வகை உள்ளதினை பொருட்டு மேலும், நகர்மன்ற தீர்மானத்தின்படி கீழ்க்கண்டவாறு அனுமதி சீட்டு நுழைவு சீட்டு, மினி தியேட்டர் பராமரிப்பு செய்ய நுழைவு கட்டணம் மற்றும் இதர கட்டணம் ஆகியவை நகர்மன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1 | நுழைவு கட்டணம் | சிறியவர்கள் | இல்லை |
| | | பெரியவர்கள் | ரூ.20.00 |
| 2 | கண்ணாடி மாளிகை | சிறியவர்கள் | ரூ.50.00 |
| | | பெரியவர்கள் | ரூ.50.00 |
| 3 | மினி தியேட்டர் 7D | சிறியவர்கள் | ரூ.50.00 |
| | | பெரியவர்கள் | ரூ.70.00 |
| 4 | டேஷிங்கார் | சிறியவர்கள் | ரூ.50.00 |
| | | பெரியவர்கள் | ரூ.50.00 |
| 5 | V.R.Games | | ரூ.50.00 |
| 6 | Basket Ball | | ரூ.25.00 |
| 7 | Bike Rider | | ரூ.25.00 |
| 8 | Racing Car | | ரூ.25.00 |
| 9 | சிறியவர்கள் விளையாட்டு | | ரூ.10.00 |
| | Duck | | ரூ.25.00 |
| | Train | | ரூ.25.00 |
| 10 | Trumping – Big, Small | | ரூ.75.00 |
| 11 | Baby Water Peddling | சிறியவர்கள் மட்டும் | ரூ.25.00 |
| 12 | இரு சக்கர வாகனங்கள் | | ரூ.6.00 |
| 13 | நான்கு சக்கர வாகனங்கள் | | ரூ.10.00 |

எனவே புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பூங்கா பராமரிப்பினை மூன்று வருடத்திற்கு M/s.K Infra. ஒப்பந்ததாரருக்கு பராமரிப்பு பணி செய்திடவும், பராமரிப்பு காலம் முடிவுற்ற பிறகு மீண்டும் நகராட்சி வசம் நல்ல நிலையில் ஒப்படைப்பு செய்வதற்கு மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் தொகையினை வசூல் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை செலுத்திடவும், நிபந்தனை அடிப்படையில் 15.03.2024ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் 31.03.2027–ல் முடிவடைவதால் மேற்கண்ட பூங்காவிற்கான பணிகள் குறித்து முறையான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நுகர்வோர் நலன் மக்கள் விழிப்புணர்ச்சி மற்றும் ஊழல் தடுப்பு இயக்கத்திற்கு 07.08.2024 அன்று கள ஆய்வு செய்ய நகராட்சி ஆணையாளர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டு நுகர்வோர் நலன் மக்கள் விழிப்புணர்ச்சி மற்றும் ஊழல் தடுப்பு இயக்கம், கோப்புகளை கள ஆய்வு நேரடியாக பார்வையிட்டனர். அப்போது இம்மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் விடுப்பில் இருந்த காரணத்தினால் புதுக்கோட்டை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள கலைஞர் பூங்கா வரும் மக்களிடம் தற்போது நுழைவு கட்டணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை என்ற விவரம் 11.09.2024 அன்று தவறுதலாக பதில் அளிக்கப்பட்டது. எனவே சம்பந்தப்பட்ட அலுவலர் மீது 16.09.2024 அன்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம், புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

புதுக்கோட்டை மாநகராட்சியில் அரசு கலைக் கல்லூரி எதிர்ப்புறம் உள்ள கலைஞர் பூங்காவிற்கு ஆரம்பத்தில் பொதுமக்களிடமிருந்து நுழைவு கட்டண வசூலிக்கப்படாமல் இருந்தது என்பதும், பின்பு நுழைவு கட்டணம் நபருக்கு 20 ரூபாய் என்று வசூல் செய்யப்பட்டது என்பதும், தற்போது நுழைவு கட்டணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை என்று உதவிப்பொறியாளர் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் அளித்தார் என்பதும், இது தவறானது என மாநகராட்சி ஆணையர் தெரிவித்து, தவறான தகவல் அளித்த உதவிப் பொறியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார் என்பதும், ஒப்பந்தம் விடப்பட்டதாகக் கூறி தனியார் மூலம் மேற்கண்ட பூங்காவிற்கு செல்ல பொதுமக்களிடமிருந்து நுழைவு கட்டணம் ரூ.50 மீண்டும் வசூலித்து வருகிறார்கள் என்பதும், இந்த கட்டணம் நிர்ணயம் செய்ததற்கு எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் கோரமலும், மாநகராட்சி அனுமதியில்லாமலும், வசூலிக்கப்படுகிறது என்பதும் ஒப்பந்தப்புள்ளி நகல் கோரப்பட்டும் மனுதாரருக்கு அளிக்கப்படவில்லை என்பதும், கட்டணம் நிர்ணயம் செய்ததற்கு எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் கோரமலும் மாநகராட்சி அனுமதியில்லாமலும், தொகை வசூலிக்கப்பட்டதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து நபர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மற்றும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

புதுக்கோட்டை நகராட்சி புதிய பேருந்து நிலையம் 4.96 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய பூங்கா அமைக்க மன்ற தீர்மானத்தின் படியும், இதற்கு IUDM 2019-2020-ஆம் திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் IUDM திட்ட பங்களிப்பு தொகை ரூ.810.225 இலட்சம் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.90.025 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.பி.கருப்பையா என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்ற தீர்மான எண்.855, நாள் 31.03.2020–ல் ஒப்புதல் பெறப்பட்டு, அதற்கான வேலை உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டது என்பதும், மாமன்ற தீர்மான எண்.447, நாள் 12.01.2024–ல் பூங்கா பராமரிப்பிற்கும், மாத வாடகை நிர்ணயம் செய்தும், பூங்கா பராமரிப்பு மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து பராமரித்து செய்திடவும்,

பூங்கா நுழைவு கட்டணம் ரூ.20/– வசூல் செய்திடவும் தீர்மானிக்கப்பட்டு பூங்கா 28.02.2024 அன்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது என்பதும், இப்பூங்காவில் அறிவியல் சார்ந்த உபகரணங்கள், மினி தியேட்டர், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள், கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டு ஒப்பந்தத்தில் இனவாரியாக குறிப்பிட்டுள்ள உபகரணங்கள் அனைத்திற்கும் மூன்று வருடத்திற்கு ஒப்பந்ததாரே பழுது மற்றும் பராமரிப்பு செய்து கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும், இப்பூங்காவில் உட்புற தெரு விளக்குகள், உயர் மின் கோபுர விளக்குகள், திரையங்கம், மியூசிக்கல் பவுண்டெயின், அறிவியல் சாதனங்கள், பூங்கா கட்டமைப்பு பச்சை புல்வெளிகள், திறந்த வெளி திரையரங்கம், மின்சார கார் ஓட்டும் கூடம், கழிப்பிடம் மற்றும் சிறுவர்கள் விளையாடும் இடம், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கான உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், நகர்மன்ற தீர்மானத்தின்படி மேற்கண்ட பூங்காவிற்கு பொதுமக்கள் செல்வதற்கு அனுமதி சீட்டு, நுழைவு சீட்டு, மினி தியேட்டர் பராமரிப்பு செய்ய நுழைவு கட்டணம் மற்றும் இதர கட்டணம் ஆகியவை நகர்மன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதும், இப்பூங்காவினை பராமரிப்பதற்காக மூன்று வருடத்திற்கு பராமரிப்பு பணி செய்திடவும், பராமரிப்பு காலம் முடிவுற்ற பிறகு மீண்டும் நகராட்சி வசம் நல்ல நிலையில் ஒப்படைப்பு செய்வதற்கு மாமன்ற தீர்மானத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத் தொகையினை வசூல் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை செலுத்திடவும், நிபந்தனை அடிப்படையில் M/s.K Infra. என்ற ஒப்பந்ததாரருக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது என்பதும், இந்த ஒப்பந்தம் 31.03.2027–ல் முடிவடைவதால் மேற்கண்ட பூங்காவிற்கான பணிகள் குறித்து முறையான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் மற்றும் நுகர்வோர் நலன் மக்கள் விழிப்புணர்ச்சி மற்றும் ஊழல் தடுப்பு இயக்கத்திற்கு கள ஆய்வு செய்ய நகராட்சி ஆணையாளரால் அனுமதி அளிக்கப்பட்டதன் அடிப்படையில் கள ஆய்வு நேரடியாக பார்வையிட்ட போது, இம்மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் விடுப்பில் இருந்த காரணத்தினால் புதுக்கோட்டை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள கலைஞர் பூங்காவிற்கு வரும் மக்களிடம் தற்போது நுழைவு கட்டணம் ஏதும் வசூல் செய்யப்படவில்லை என்ற விவரம் தவறுதலாக பதில் அளிக்கப்பட்டதால், சம்மந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், புதுக்கோட்டை மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் 4.96 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மன்ற தீர்மானத்தின்படி, IUDM 2019-2020-ஆம் திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 11, நாள் 23.01.2020–ல் IUDM திட்ட பங்களிப்பு தொகை ரூ.810.225 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.90.025 இலட்சத்தில் அறிவியல் சார்ந்த உபகரணங்கள் உள்ளடக்கிய கலைஞர் பூங்கா என்று பெயரிடப்பட்ட புதிய பூங்கா அமைக்கப்பட்டு, அப்பூங்கா இருபது (20) நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தம் M/s.K Infra. என்ற ஒப்பந்ததாரருக்கு 31.03.2027 வரை மாமன்ற தீர்மானத்தின்படி ஒப்பந்தம் போடப்பட்ட நிலையில், இப்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள உட்புற தெரு விளக்குகள், உயர் மின் கோபுர விளக்குகள், திரையங்கம், மியூசிக்கல் பவுண்டெயின், அறிவியல் சாதனங்கள், பூங்கா கட்டமைப்பு பச்சை புல்வெளிகள், திறந்த வெளி திரையரங்கம், மின்சார கார் ஓட்டும் கூடம், கழிப்பிடம் மற்றும் சிறுவர்கள் விளையாடும் இடம், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கான உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் ஆகியவற்றில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அவை உடனடியாக ஒப்பந்தாரரால் சீர் செய்யப்படுகிறதா என்பதையும், மேற்கண்டவற்றை பராமரிப்பதற்காக ஒப்பந்தப்படி, ஒப்பந்ததாரரால் பொதுமக்களிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மட்டும் வசூலிக்கப்படுகிறதா என்பதையும்

அடிக்கடி மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு.N. சையது இப்ராகிம்,
TS. No.4205, தெற்கு 4–ஆம் வீதி,
ஆலங்குடி ரோடு, அண்ணா சிலை அருகில்,
புதுக்கோட்டை–622 001.

(2) ஆணையாளர்,
புதுக்கோட்டை மாநகராட்சி,
புதுக்கோட்டை–622 001.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

9/10/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032